கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு

O.S..No.254/2023 (PW1)

வாதி தரப்பு சாட்சி 1 ன் வாக்குமூலம் 1875ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. செ.ரூபிணி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. N. ஸ்ரீமான் சிங்காரம் | சமயம் | : | -- |
| த/பெ. | : | நடராஜன் | ஊர் | : | நெருப்பெருச்சல் |
| வயது | : | 51 | தாலூக்கா | : | திருப்பூர் |
| தேதி | : | 06.03.2025 | தொழில் | : | டிரைவர் |

முதல் விசாரணை

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் டவுன், நெருப்பெருச்சல், க.எண் 8/2521 தியாகி குமரன் தெரு என்ற விலாசத்தில் வசித்து வரும் நடராஜன் மகன் சுமார் 51 வயதுள்ள N. ஸ்ரீமான் சிங்காரம் ஆகிய நான் சத்திய பிரமாணத்தின்பேரில் கூறும் கூடுதல் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வ. எண் | தேதி | ஆவணங்கள் மற்றும் அதன் தன்மை | ஆவணம்.எண். |
|---|---|---|---|
| 1 | 11.09.2014 | பிரதிவாதிகள் பெயரிலான கிரைய ஆவணம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.2 |
| 2 | 12.09.2014 | பிரதிவாதிகள் இருவரும் வாதியின் தாயார் வீரம்மாள் பெயருக்கு எழுதிக்கொடுத்த அடமானக்கடன் பத்திரம் – சார்பதிவாளர் அலுவலக நகல் | வா.சா.ஆ.3 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்துகொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.